Shri Siddhantha Shikhamani

Parayana text

Written by : Sri Shivayogi Shivacarya

Script : Tamil / தததுத

Concept & Inspiration By : Sri Kashi Jagadguruji

Publication of

Shaiva Bharathi Shodha Pratishthana

Shri Kashi Peeth

D35/77, Jangamawadimath,

Jangamawadi, Varanasi 221 001

॥ श्रीसिद्धान्तशिखामणिः ॥

शिवयोगिशिवाचार्यविरचितः

॥ प्रथमः परिच्छेदः ॥

श्रीनाथः सोममूर्तिर्जयति परशिवस्त्र्यम्बकस्ताररूपः
स्वच्छश्रीब्रह्मरन्ध्रस्थितसितजलप्रोद्यद-
ब्जत्रिकोणे ।
इच्छाज्ञानक्रियाख्ये त्रिविधलिपिमये हक्षलार्णाग्रपार्श्वे
कृत्स्नार्णौन्मुख्यबिन्दौ चिदचिदुदयकृद्दृक्क्रियाङ्घ्रिद्वयाढ्यः ॥

பரிசுத்தமான பிரஹ்மரந்திரத்திலுள்ள சுத்தமான ஜலத்தில் தோன்றியதும், இச்சை, ஞானம், கிரியையாக விளங்கும் ஹ, க்ஷ, ல எனும் மூன்றெழுத்துக்களும் கொண்டதுமான தாமரையிதழ் வடிவான முக்கோணத்தில் பிரகாசிப்பவரும், அனைத்து அக்ஷரங்களும் தோன்றுவதற்கு ஏதுவாய் விளங்குவதுமான பிந்துவில் [பிரகாசிப்பவரும்] சித், அசித் ஆகிய பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பவரும், ஞானம் கிரியை என்னும் இரு சரணங்களைக் கொண்டவரும், திரியம்பகரும், பிரணவவடிவாகத் திகழ்பவரும் ஸ்ரீநாதரும் ஸோமமூர்த்தியாக விளங்குபவருமான பரசிவனுக்கு வெற்றியுண்டாகுக!

अनेकविधसिद्धान्तशिखामणिमनामयम् ।
श्रीवीरशैवसिद्धान्तमेकोत्तरशतस्थलम् ॥
रेणुकागस्त्यसंवादं निगमागमविश्रुतम् ।
प्रदीपयति गुप्तार्थमुद्धृत्य शिवयोगिराट् ॥

பல் வகைப்பட்ட சித்தாந்தங்களுக்குள்ளும் தலைசிறந்த சூடாமணியாகத் திகழ்வதும், குற்றமற்றதும், ஸ்ரீவீரசைவசித்தாந்தமானதும், நூற்றியோரு ஸ்தலங்களைப் பற்றி விளக்குவதும், ரேணுகசித்தருக்கும் அகஸ்தியமுனிவருக்குமிடையே நடந்த சம்பாஷணையாக

இருப்பதும், வேதம் மற்றும் ஆகமங்களில் போற்றப்படுவதுமான ஸித்தாந்தசிகாமணியென்னும் நூலின் உட்பொருள்களைச் சிவயோகிகளுள் தலைசிறந்த சிவயோகிராட் எடுத்துரைத்து விளக்குகிறார்.

சித்தாந்தசிகாமணி

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

மொழிபெயர்த்தருளியது

விநாயக வணக்கம்

மனவ னத்திண் மதமெனும் யானையைச்
சினவா நிற்குந் திகழிள வெண்மதி
புனைநு தற்கட் புராரிய ளித்தரு
ணனைக வுட்களி நாகிள வேழமே.

சிவபெருமானருளிய ஆனைமுகக்கடவுளே மனத்தில் தோன்றும் மதயானையை அழிக்கவல்லவர்.

त्रैलोक्यसम्पदालेख्यसमुल्लेखनभित्तये ।
सच्चिदानन्दरूपाय शिवाय ब्रह्मणे नमः ॥ १॥

செழிப்பான மூவுலகங்களெனும் சித்திரத்தை வரைவதற்கான சுவர் போல விளங்குபவரும், ஸச்சிதானந்த வடிவானவருமான சிவமெனும் பரப்பிரம்மத்திற்கு வணக்கம்.

ब्रह्मेति व्यपदेशस्य विषयं यं प्रचक्षते ।
वेदान्तिनो जगन्मूलं तं नमामि परं शिवम् ॥२॥

வேதாந்திகள் எவரை பிரம்மம் என்று அழைக்கிறார்களோ, உலகங்களுக்கெல்லாம் ஆணிவேராகத் திகழும் அப்பரமசிவனை வணங்குகிறேன்.

यस्योर्मिबुद्बुदाभासः षट्त्रिंशत्तत्त्वसञ्चयः ।
निर्मलं शिवनामानं तं वन्दे चिन्महोदधिम् ॥३॥

எந்தச் சின்மயக்கடலின் அலைகளிலிருந்து முப்பத்தாறு தத்துவங்களும் நீர்க்குமிழி போல் தோன்றுகின்றனவோ நிர்மலமான அந்த சிவபரம்பொருளை வணங்குகிறேன்.

यद्भासा भासते विश्वं यत्सुखेनानुमोदते ।
नमस्तस्मै गुणातीतविभवाय परात्मने ॥ ४॥

எவருடைய பிரகாசத்தினால் இவ்வுலகங்கள் மிளிர்கின்றனவோ, எவருடைய ஆனந்தத்தினால் உலகங்கள் மகிழ்கின்றனவோ முக்குணங்களையும் கடந்து விளங்கும் அந்தப் பரம்பொருளுக்கு எனது வணக்கங்கள்.

सदाशिवमुखाशेषतत्त्वोन्मेषविधायिने ।
निष्कलङ्कस्वभावाय नमः शान्ताय शम्भवे ॥ ५॥

ஸதாசிவப் பெருமானுடைய திருமுகத்தாமரை வாயிலாக அனைத்துத் தத்துவங்களையும் தோற்றுவித்தவரும், எவ்விதக் களங்கமுமற்று விளங்குபவருமான சிவபெருமானுக்கு எனது வணக்கங்கள்.

स्वेच्छाविग्रहयुक्ताय स्वेच्छावर्तनवर्तिने ।
स्वेच्छाकृतत्रिलोकाय नमः साम्बाय शम्भवे ॥ ६॥

தனது இச்சைக்கேற்ற உருவம் கொள்பவரும், தனது இச்சைக்கேற்ப உலகங்களை இயக்குபவரும், தன்னிச்சையாக மூவுலகங்களையும் தோற்றுவிப்பவருமான அம்மையப்பருக்கு வணக்கங்கள்.

यत्र विश्राम्यतीशत्वं स्वाभाविकमनुत्तमम् ।
नमस्तस्मै महेशाय महादेवाय शूलिने ॥ ७॥

பரசிவ வணக்கம்

உலகமெனு மோவியங்க டிகழ்த்துமொரு படமாகி யொளிர்க
ளெல்லா
மிலகுபர வொளியாகிச் சச்சிதா நந்தமா யேக மாகிப்
பலகலைகள் பரப்பிரமம் பரசிவமா லிங்கமெனப் பகரா நின்ற
திலகநுத லுமைகணவன் றிருவடித்தா மரைவணக்கஞ் செய்து
வாழ்வாம்.

இப்பரந்த உலகமெனும் ஓவியத்தை வரைவதற்கான ஒரு துணிபோல் திகழ்பவரும், சச்சிதானந்த வடிவினரும், எல்லாவற்றையும் கடந்து நிற்கும் ஒளியாக விளங்குபவரும், பரப்பிரம்மமான சிவபெருமானது திருவடிகளை வணங்குவோம்.

यामाहुः सर्वलोकानां प्रकृतिं शास्त्रपारगाः ।
तां धर्मचारिणीं शम्भोः प्रणमामि परां शिवाम् ॥ ८॥

கற்றோர்கள் எந்த சக்தியை உலகங்கள் தோன்றுவதற்கான மூலப்பொருளாகக் கருதுகின்றனரோ, சிவபெருமானின் இல்லத்துணைவியான அந்த சக்திக்கு வணக்கங்கள்.

यया महेश्वरः शम्भुर्नामरूपादिसंयुतः ।
तस्यै मायास्वरूपायै नमः परमशक्तये ॥ ९॥

எந்த சக்தியின் வாயிலாகச் சிவபெருமான் பல உருவங்களையும், பெயர்களையும் அடைகிறாரோ மாயா வடிவான அந்தப் பரமசக்திக்கு எனது வணக்கங்கள்.

शिवाद्यादिसमुत्पन्नशान्त्यतीतपरोत्तराम् ।
मातरं तां समस्तानां वन्दे शिवकरीं शिवाम् ॥ १०॥

சாந்தியதீதம் முதலான பரதத்துவங்கள் எந்த சிவசக்தியின் வாயிலாகத் தோன்றுகின்றனவோ அச்சக்தியை வணங்குகிறேன்.

इच्छाज्ञानादिरूपेण या शम्भोर्विश्वभाविनी ।
वन्दे तां परमानन्दप्रबोधलहरीं शिवाम् ॥ ११॥

எந்த சிவபெருமானுக்கு இச்சா சக்தியாகவும், ஞானசக்தியாகவும் விளங்கி உலகங்களையெல்லாம் தோற்றுவிக்கிருளோ ஆனந்தக் கடலாகத் திகழும் அந்த சக்தியை வணங்குகிறேன்.

अमृतार्थं प्रपन्नानां या सुविद्याप्रदायिनी ।
अहर्निशमहं वन्दे तामीशानमनोरमाम् ॥१२॥

அழிவற்ற அமிர்தத்தன்மையை அடைய விரும்புவோருக்கு உயர்ந்த ஞானத்தை அருளும் அந்த சக்தியை இடையருது வணங்குகிறேன்.

பராசகதி வணககய

மாயையெனு மணலகொடுல கெனுருசிறறி லிழைததாடுய
வளமையாளை
மூயமல வாருளாரககுரு செழுருசுடரை யுயாரகளெலலா
முலனமலற
தாயையொரு பரசிவனைப பெயராககுரு சமவாய சததி
தலனைத
துயவறி வானநத வடிவாளை மலைமகளைத தொழுதல
செயவாய.

மாயையெனும் மணலால் உலகமெனும் சிறிய வீட்டைக் கட்டி விளையாடும் இளம் பெண்ணைகத் திகழ்பவளும், மூலமலமெனும் இருளை நீக்கும் பரஞ்சுடரானவளும், அனைத்து உயிர்களையும் ஈன்ற ஒப்பற்ற அன்னையானவளும், சிவபெருமானை விட்டகலாத சக்தியுமான மலைமகளைத் தொழுவோம்.

வசவதேவ வணககய

எ௭ோணாகழுநத வ௭ோடமெலலாய வலயபுராநத தெனவுமைமா
ன்ஶறு வேழந,
த௭ோணாகழுநத நபுஙகொ௭ோறைச சடையொருவ௭ோ றனைச
சூழுநத தகைமை போல,
ம௭ோணாகழுநத சிவசரணர தமையெலலாந தொழுநதகைமை
வாயபப வெஙக,
ஞூ௭ோணாகழுநத வசவனெனுய பெயருடையோ௭ோ
றனைவணஙகி யுவகை கூரவாய.

சிவபெருமான் ஒருவரை மட்டும் வலம் வந்து அனைத்துலகங்களையும் வலம் வந்த பேற்றை விநாயகப் பெருமான் அடைந்தது போல், அனைத்து சிவசரணர்களையும் வணங்கிய பேற்றை தன்னை வணங்குவோர்க்கு நல்கும் பஸவபெருமானை வணங்குவோம்.

कश्चिदाचारसिद्धानामग्रणीः शिवयोगिनाम् ।
शिवयोगीति विख्यातः शिवज्ञानमहोदधिः ॥ १३॥
शिवभक्तिसुधासिन्धुजृम्भणामलचन्द्रिका ।
भारती यस्य विदधे प्रायः कुवलयोत्सवम् ॥ १४॥

சைவாசாரங்களைக் கடைப்பிடித்து ஒழுகும் சித்தர்களின் வமிசத்தில் சிவஞானக் கடலாகச் சிவயோகி என்று புகழ்பெற்ற ஒருவர் தோன்றினார்; சிவபக்தியாகிய அமிர்தத்தைப் பொழியும் சந்திரனைப் போல் அவருடைய சொற்கள் உலக மக்களை ஆனந்தத்தில் ஆழ்த்திவந்தன.

तस्य वंशे समुत्पन्नो मुक्तामणिरिवामलः ।
मुद्ददेवाभिधाचार्यो मूर्धन्यः शिवयोगिनाम् ॥ १५॥

அவருடைய வமிசத்தில் கடலில் முத்து தோன்றுவது போல் சிவயோகிகளுள் தலைசிறந்த முத்ததேவரென்பார் தோன்றினார்.

मुद्दानात् सर्वजन्तूनां प्रणतानां प्रबोधतः ।
मुद्ददेवेति विख्याता समाख्या यस्य विश्रुता॥ १६॥

தன்னை வணங்குவோரைப் பேரறிவாற்றலுடன் இணைப்பதால் அவர் முத்ததேவரெனப் புகழடைந்தார்.

तस्यासीन्नन्दनः शान्तः सिद्धनाथाभिधः शुचिः ।
शिवसिद्धान्तनिर्णेता शिवाचार्यः शिवात्मकः ॥ १७॥

அவருக்குச் சாந்தகுணங்கள் நிறைந்தவரும், களங்கமற்றவரும், சைவசித்தாந்த ஆசாரியருமான ஸித்தநாதரெனப் பெயருடைய ஒரு திருமகன் இருந்தார்.

वीरशैवशिखारत्नं विशिष्टाचारसम्पदम् ।
शिवज्ञानमहासिन्धुं यं प्रशंसन्ति देशिकाः ॥ १८॥

கற்றோர்கள் அவரை வீரசைவகுலதிலகமென்றும், மிக உயர்ந்த ஒழுக்கங்கள் நிறைந்தவரெனவும், சிவஞானக் கடலென்றும் புகழ்ந்தனர்.

यस्याचार्यकुलाज्जाता सतामाचारमातृका ।
शिवभक्तिः स्थिरा यस्मिन् जज्ञे विगतविप्लवा ॥ १९॥

அந்த ஆசாரிய குலத்திலிருந்து நல்லோர்களின் ஒழுக்கங்களும், உறுதியான சிவபக்தியும் தோன்றி எவ்விதக் குழப்பமுமின்றி விளங்கின.

तस्य वीरशिवाचार्यशिखारत्नस्य नन्दनः ।
अभवच्छिवयोगीति सिन्धोरिव सुधाकरः ॥ २०॥

பாற்கடலிலிருந்து சந்திரன் உதித்தது போல் அந்த வீரசைவகுலத்திலிருந்து சிவயோகி என்பார் தோன்றினர்.

चिदानन्दपराकाशशिवानुभवयोगतः ।
शिवयोगीति नामोक्तिर्यस्य याथार्थ्ययोगिनी॥ २१॥

சிதானந்த பராகாசமெனும் வெட்ட வெளியைக் கடந்து விளங்கும் சிவானுபவத்தை எப்போதும் அனுபவிப்பதால் அவருக்கு சிவயோகி என்னும் பெயர் நிலைத்து நின்றது.

நூல வரலாறு

ஓஙகுபுகழுச சிததரா மேசனென வொருகுரவ ஹுளன வஙேசேய
தாஙகுவாறற சைவசிகா மணமுததி தேவனவங றநயங
மாயை
நஙகுகுணக குஙறனைய சிததநா தபபெயரோ னகழுதத
வஙபால
வாஙகுதிரைக கடறகஙமதி போறசிவயோ கிபபெயரோங
வநது திததாங.

புகழ் பெற்ற சித்தராமேசனெனும் பெயர்கொண்ட குரவனுடைய திருமகன் சைவசிகாமணியான முத்திதேவன்; அவனுடைய மகன் குணக்குன்ருன சித்தநாதன்; அவனிடமிருந்து கடலில் சந்திரன் தோன்றியது போல் சிவயோகி வந்துதித்தான்.

शिवागमपरिज्ञानपरिपाकसुगन्धिना ।
यदीयकीर्तिपुष्पेण वासितं हरितां मुखम् ॥२२॥

அவருடைய சிவந்த முகமானது சிவாகமங்களைக் கற்று அந்தப் புகழ்மணம் வீசும் மலரால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

येन रक्षावती जाता शिवभक्तिः सनातनी ।
बुद्धादिप्रतिसिद्धान्तमहाध्वान्तांशुमालिना ॥ २३॥

சூரியன் [இருளிலிருந்து உலகைக் காப்பது போல்] பௌத்தம் முதலான புறச்சமயக் கொள்கைகளாகிய இருள்மலத்திலிருந்து அவரால் என்றுமழியாது தொன்றுதொட்டு வரும் சிவபக்தியானது பாதுகாக்கப்பட்டது.

स महावीरशैवानां धर्ममार्गप्रवर्तकः ।
शिवतत्त्वपरिज्ञानचन्द्रिकावृतचन्द्रमाः ॥ २४॥
आलोक्य शैवतन्त्राणि कामिकाद्यानि सादरम् ।
वातुलान्तानि शैवानि पुराणान्यखिलानि तु ॥ २५॥

வீரசைவ தருமத்தை நிலைநாட்ட எழுந்தவரும், சிவதத்துவங்கள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்த சந்திரனைப் போல் பிரகாசிப்பவருமான அந்த சிவயோகிகள் காமிகம் முதல் வாதுலம் ஈறான எல்லா சைவாகமங்களையும், சைவபுராணங்களையும் நன்கு ஆராய்ந்து,

சிவபததி யெனுமமுத மொடுவளஙகுலூ சிவஞானத திஙக ளனு
முவமிகக வரிய திருப பாறகடலாஞ சிவயோகி யுலக முயய
அவணுறற வுளததினொடு காமிகமே முதலாய வாக மஙக
ணவையுறற சிவபுரா ணஙகளெனப பட்டவெலலா நயநது
பாாததது

वेदमार्गाविरोधेन विशिष्टाचारसिद्धये ।
असन्मार्गनिरासाय प्रमोदाय विवेकिनाम् ॥ २६॥
सर्वस्वं वीरशैवानां सकलार्थप्रकाशनम् ।
अस्पृष्टमखिलैर्दोषैरादृतं शुद्धमानसैः ॥ २७॥
तेष्वागमेषु सर्वेषु पुराणेष्वखिलेषु च ।
पुरा देवेन कथितं देव्यै तन्नन्दनाय च ॥ २८॥

வேதநெறிக்கு விரோதமில்லாததும், வீரசைவக் கொள்கைகள் அனைத்தும் கொண்டதும், எவ்விதக் குற்றமுமற்றதும், மற்றவர்களால் கூறப்படாததும், முன்னொரு காலத்தில் சிவபெருமானால் தேவிக்கும் முருகப் பெருமானுக்கும் உபதேசிக்கப்பட்டதுமான கருத்துக்களை அந்த சிவாகமங்கள் மற்றும் புராணங்களிலிருந்து தேர்ந்தெடுத்து புறச்சமயக் கொள்கைகளை அழிப்பதற்கும், சன்மார்க்கம் நிலைபெறுவதற்காகவும்,

மறைநெறிகள் வழுவாம லயனெறிக டடுமாற மதிஞ ரெல்லா
மறிவமைதி பெறவர்ர சைவநெறி யனைத்துமொருங் கமைந்து
காண
நிறைவுதரு மாகமவே தங்கள்புரா ணங்கடொறு நெறுறி நாட்டத
திறைவனுமை யொடுமுருகற் கருளியதா யறிஞருள மிசைவ
தாகி.

வேதநெறியிலிருந்து வழுவாததும், புறநெறிகளை ஒடுக்குவதும், அறிஞர்கள் படித்து இன்புறுவதும், அனைத்து சைவநெறிகளும் ஒருசேர இருப்பதும், வேதம், ஆகமம், புராணம் ஆகியவை கூறும் எல்லா சைவநெறிகளும் நிரம்பியதும், சிவபெருமான் உமையம்மை, முருகப்பெருமான் ஆகியோர்க்கு அருளியதும், அறிஞர்களால் போற்றப்படுவதும்,

तत्सम्प्रदायसिद्धेन रेणुकेन महात्मना ।
गणेश्वरेण कथितमगस्त्याय पुनः क्षितौ ॥ २९॥
वीरशैवमहातन्त्रमेकोत्तरशतस्थलम् ।
अनुग्रहाय लोकानामभ्यधात् सुधियां वरः ॥ ३०॥

அச்சம்பிரதாயத்தில் வந்தவரும் சிவகணங்களுக்குத் தலைவராகிய விளங்கியவருமான ரேணுகரென்னும் பெரியோரால் முன்னர் அகத்தியருக்கு அருளப்பட்டதும், நூற்றியோரு ஸ்தலங்களைப் பற்றி விளக்குவதுமான அந்நூலை அந்த சிவயோகி என்பார் இயற்றினர்.

சங்கரசய பரதாய னாயவரே ணுகண்முனவர் தங்கட
கெல்லாய
புங்கவனா கியகலய முனக்குரைதத தாகியவண் பொருந்தி
யொண்ணு
தங்கடலை யடடவொரு நூறு தலய புணர்வர சைவ நூலை
யாங்குரைசெய தனனதனைத தமிழபபடுததி முறைபறழா
தியயப ஹுறறேன.

சிவபக்திச் செல்வம் நிறைந்த சிவயோகிகள் காமிகம் முதலான சிவாகமங்களேயும், மற்ற புராணங்களேயும் நன்கு ஆய்ந்து மறைகளின் பொருள்கள் இனிதே விளங்குவதும், இரேணுகர் அகத்திய முனிவர்க்கு முன்னர் அருளியதும், நூற்றியோரு தலங்களேப் பற்றி விளக்குவதுமான இந்நூலே நான் தமிழில் செய்கிறேன்.

सर्वेषां शैवतन्त्राणामुत्तरत्वान्निरुत्तरम् ।
नाम्ना प्रतीयते लोके यत्सिद्धान्तशिखामणिः ॥ ३१॥
अनुगतसकलार्थे शैवतन्त्रैः समस्तैः
प्रकटितशिवबोधाद्वैतभावप्रसादे ।
विदधतु मतिमस्मिन् वीरशैवा
विशिष्टाः पशुपतिमतसारे पण्डितश्लाघनीये ॥ ३२॥

எல்லா சைவதந்திரங்களுக்கும் மேலானதால் இந்நூல் ஸித்தாந்தசிகாமணி எனப் புகழ் பெற்றது.

கற்றவர்களால் போற்றத்தக்கதும், எல்லா சைவக்கருத்துக்களும் அடங்கியதும், சிவாத்துவிதானுபவத்தை நல்குவதும், சைவக்கருத்துக்களின் சாரமாக விளக்குவதுமான இந்நூலே சைவர்கள் அனேவரும் ஆதரிப்பார்களாக!

நூபெயர

முநதுமெச சைவதநதி ரஙகளுககுய வளஙகுதன முடியாய
வர
தநதிரமுத தரமாகித தனககுமே லிலாமையனா சாறு நாம
நநதுசித தாநதசிகா மணயாகுஞ சிவாததுவத ஞான
வாழவைப
பநதமறத தருமிதலகட டிகழவர சைவமனம பட்டு நிகுய.

சைவதந்திரங்களுள் சிறந்த வீரதந்திரத்தின் உத்தரபாகமாயும், சித்தாந்தசிகாமணி என்னும் பெயர் கொண்டு சிவாத்துவிதஞானத்தை வழங்கும் இந்நூலின்கண் வீரசைவர்களின் மனம் பொருந்தி விளங்கும்.

உலகிலைமலி புகழுபடைதத சிவயோகி தனதுபே ருணாரவா
னாலே
மலைவதற வருளாயவாச சிததாநத சிகாமணாயாலை மதிசெ
லுததிக
கலைமுழுது முணாநதவாமு னயாலைமொழியக கருதலொரு
கடுகு நாடடி
யலைகடலைக கடைநதுசுவை யமுதெடுபபக கருதலொடொப
பாகு மலைறே.

புகழ்பெற்ற சிவயோகியானவர் தனது பேருணர்விஞல் அருளிய இந்த சித்தாந்தசிகாமணி எனும் நூலே கற்றவர்கள் முன் உரைக்கப் புகும் நான் எனது சிற்றறிவை எண்ணி வெட்கமடைகிறேன்.

ஆககியோலைபெயா

தலாஙகுலவு மலயமமா கலயமுனாக கிரேணுகலைறலைல ணளாயா
லபநத
நலாஙகுலவு சிததாநத சிகாமணாயைத தமிழுககவாயா னலைகு
செயதா
னலாஙகுதமிழுக கடலையொரு நாவாயாற கடநதுலக
மிறைஞசா நிலைற
பொலாஙகழலெய பெருநதகையாகு சிவபபாரகா சையனெனுய
பொருவாலானே.

அகத்திய முனிவர்க்கு இரேணுகன் முன்னர் அருளிய சித்தாந்தசிகாமணி எனும் நூலேச் சிவப்பிரகாசையன் என்போன் தமிழ்ச் செய்யுள் வடிவத்தில் ஆக்கியுள்ளான்.

॥ इति श्रीसिद्धान्तशिखामणौ प्रथमपरिच्छेदः ॥

॥ द्वितीयपरिच्छेदः ॥

सच्चिदानन्दरूपाय सदसद्व्यक्तिहेतवे ।
नमः शिवाय साम्बाय सगणाय स्वयम्भुवे ॥

ஸச்சிதானந்த வடிவாயும், சத்து மற்றும் அசத்துப் பொருட்களின் தோற்றத்திற்கு ஏதுவாகவும் விளங்குபவரும், தானுகவே தோன்றியவரும், அம்பிகையுடன் கூடியிருப்பவருமான சிவபெருமானுக்கு எனது வணக்கங்கள்.

सदाशिवमुखाशेषतत्त्वमौक्तिकशुक्तिकाम् ।
वन्दे माहेश्वरीं शक्तिं महामायादिरूपिणीम् ॥ २॥

ஸதாசிவப்பெருமானுடைய முககமலத்திலிருந்து வெளிவரும் அனைத்துத் தத்துவங்களையும் கொண்ட முத்துச்சிப்பியாகத் திகழ்பவளும், பரமசிவனுடைய ஶக்தியாக விளங்குபவளும், மஹாமாயாவடிவமுடையவளுமான அம்பிகையை வணங்குகிறேன்.

अस्ति सच्चित्सुखाकारमलक्षणपदास्पदम् ।
निर्विकल्पं निराकारं निरस्ताशेषविप्लवम् ॥ ३॥
परिच्छेदकथाशून्यं प्रपञ्चातीतवैभवम् ।
प्रत्यक्षादिप्रमाणानामगोचरपदे स्थितम् ॥ ४॥
स्वप्रकाशं विराजन्तमनामयमनौपमम्।
सर्वज्ञं सर्वहं शान्तं सर्वशक्तिनिरङ्कुशम् ॥ ५॥
शिवरुद्रमहादेवभवादिपदसंज्ञितम् ।
अद्वितीयमनिर्देश्यं परंब्रह्म सनातनम् ॥ ६॥

ஸத், சித், ஆனந்த சொரூபமானதும், இலக்கணத்திற்கு அப்பாற்பட்டதும், மாற்றங்களற்றதும், உருவமற்றதும், எவ்வித சலனமும் இல்லாததும், வரையறையற்றதும், எல்லா உலகங்களையும் கடந்து நிற்பதும், பிரத்தியக்ஷம் முதலான பிரமாணங்களால் அறியப்படாததும், சுயம்பிரகாசமானதும், குற்றமற்றதும், ஒப்பற்றதும், எல்லாவற்றையும் அறிந்ததும், அனைத்தையும் அழித்துத் தன்னுள் ஒடுக்குவதும்,

அமைதியானதும், அளவற்ற ஆற்றல் கொண்டதும், சிவன், ருத்திரன், மஹாதேவன், பவன் முதலான பற்பல பெயர்களைக் கொண்டதும், தன்னொப்பாரில்லாததும், இரண்டற்றதுமான பரபிரம்மம் அநாதிகாலமாய் விளங்கி வருகின்றது.

तत्र लीनमभूत् पूर्वं चेतनाचेतनं जगत् ।
स्वात्मलीनं जगत्कार्यं स्वप्रकाश्यं तदद्भुतम् ॥ ७॥
शिवाभिधं परंब्रह्म जगन्निर्मातुमिच्छया ।
स्वरूपमादधे किञ्चित् सुखास्फूर्तिविजृम्भितम् ॥ ८॥

உயிரற்ற பொருள்களையும், உயிர்களையும் கொண்ட இப்பிரபஞ்சமானது முன்னர் அங்கு ஒடுங்கியிருந்தது; தன்னுள் ஒடுங்கியிருந்த அந்த உலகங்களென்னும் காரியத்தைப் பிரகாசித்து வெளியில் தோற்றுவிக்கும் இச்சையினால் சிவமென்னும் அந்த பரப்பிரம்மமானது ஆனந்தம் மிளிரும் சொரூபத்தைக் கைக்கொண்டது.

இரேணுகர்காதை

பரபகுசோறுபததி

ஆதியாலநாதி கணமத தாருயாரக குலக மாகச
சேதந மயமா யொணறாகு சிததாநத சிவண றனாது
பேதமில சததியாலே பெறறதோர ரூபததி யெயதி
மாதொரு பாகனாகு மகேசனாய வயஙகா நிணறாண.

ஆதியில் உலகங்களையெல்லாம் கடந்த சிவபெருமான் தன்னை விட்டுப் பிரியாத சக்தியின் வாயிலாக அர்த்தநாரீசுவர வடிவம் தாங்கி நின்றான்.

निरस्तदोषसम्बन्धं निरुपाधिकमव्ययम् ।
दिव्यमप्राकृतं नित्यं नीलकण्ठं त्रिलोचनम् ॥ ९॥

चन्द्रार्धशेखरं शुद्धं शुद्धस्फटिकसन्निभम् ।
शुद्धमुक्ताफलाभासमुपास्यं गुणमूर्तिभिः ॥ १०॥
विशुद्धज्ञानकरणं विषयं सर्वयोगिनाम् ।
कोटिसूर्यप्रतीकाशं चन्द्रकोटिसमप्रभम् ॥ ११॥
अप्राकृतगुणाधारमनन्तमहिमास्पदम् ।

அந்த சொரூபம் எவ்வித களங்கமுமற்றதாயும், எல்லா நிலைகளையும் கடந்ததும், அழிவற்றதும், தெய்வீகமானதும், பிரகிருதிவிகாரங்களற்றதும், என்றுமழியாததும், நீலகண்டத்தையும், முக்கண்களையும் உடையதும், பிறைச் சந்திரனைத் தலையில் சூடியதும், சுத்த ஸ்படிகம் போல் மிளிர்வதும், சுத்தமான முத்தைப் போன்ற ஒளிபொருந்தியதும், பிரம்மா, விஷ்ணு முதலிய பிரகிருதியின் குணங்களுக்கு ஆட்பட்ட மூர்த்திகளால் எப்போதும் வணங்கப்படுவதும், குற்றமற்ற உயர்ந்த ஞானத்தை வழங்குவதும், யோகிகளால் தியானிக்கப்படுவதும், கோடி சூரியன்களுக்கொப்பான ஒளிபொருந்தியதும், கோடி சந்திரர்களுக்கொப்பான குளிர்ச்சி உடையதும், பிரகிருதியின் குணங்களைக் கடந்ததும், அளவற்ற மஹிமை பொருந்தியதாயும் விளங்கியது.

तदीया परमा शक्तिः सच्चिदानन्दलक्षणा ॥ १२॥
समस्तलोकनिर्माणसमवायस्वरूपिणी ।
तदिच्छयाऽभवत् साक्षात्तत्स्वरूपानुसारिणी ॥ १३॥
जगत्सिसृक्षुः प्रथमं ब्रह्माणं सर्वदेहिनाम् ।
कर्तारं सर्वलोकानां विदधे विश्वनायकः ॥ १४॥

அதன் பரமசக்தியானது ஸச்சிதானந்த வடிவமாய் அனைத்து உலகங்களையும் சிருஷ்டி செய்யும் ஆற்றல் கொண்டதாய் அந்தப் பரப்பிரமத்தின் இச்சையால் அதைப் போன்ற சொரூபம் உடையதாய் விளங்கியது; உலகப் படைப்பில் இச்சைகொண்ட அந்த பிரம்மம் முதலில் அனைத்து உயிர்களையும் உலகங்களையும் உண்டாக்கும் திறன் கொண்டவரான பிரம்மாவைத் தோற்றுவித்தது.

சந்திர மௌலி யெம்மான் சகமெலாம் படைக்கு முன்னம்
வந்துற வாறைவ னாகு மலரயன் றன்னை நல்கி
யந்தமில் வாச்சை யெல்லா மருளின னருளினாலே
முந்துறு மயன் படைப்புத் தொழிலிடை முயற்சி பெற்றான்.

சந்திரனைத் தலையில் சூடிய சிவபெருமான் பிரம்மாவை முதலில் தோற்றுவித்து அவருக்கு ஞானத்தை அளித்தான்; அதனுல் பிரம்மனும் படைப்புத் தொழிலில் ஈடுபட்டான்.

तस्मै प्रथमपुत्राय शङ्करः शक्तिमान् विभुः ।
सर्वज्ञः सकला विद्याः सानुग्रहमुपादिशत् ॥ १५॥

தலைமகனை அப்பிரம்மாவுக்கு சக்திகள் அனைத்தும் பொருந்தியவரும், எங்கும் வியாபித்திருப்பவரும், அனைத்தையும் அறிந்தவருமான சங்கரன் எல்லா வித்தைகளையும் உபதேசித்தார்.

समस्तलोकान्निर्मातुं समुद्यमपरोऽभवत्।
कृतोद्योगोऽपि निर्माणे जगतां शङ्कराज्ञया।
अज्ञातोपायसम्पत्तेरभवन्माययावृतः ॥ १६॥

எல்லா உலகங்களையும் படைப்பதற்கான பெருமுயற்சியை சிவபிரானின் ஆணையால் பிரம்மா மேற்கொண்டார். இருந்தும் அவருக்கு அதன் உபாயம் தெரியவில்லை.

विधातुमखिलान् लोकानुपायं प्राप्तुमिच्छया ।
पुनस्तं प्रार्थयामास देवदेवं त्रियम्बकम् ॥ १७॥

உலகங்களனைத்தையும் படைக்கும் விருப்பமுடன் பிரம்மா திரியம்பகனை சிவபிரானை மீண்டும் பிரார்த்தித்தார்.

சங்கரனாணை கொண்டு சகம்புர் தொழிலிற் புக்க
பங்கயன் மாயை மாலிற் பட்டுளக் குறுமு பாய
மங்குண்ர் கிலனாய மண்டு மரவணிப் பெருமான் பாதச்
செங்கமலங்கள் போற்றி நின்றிது செப்ப லுற்றான்.

படைப்புத் தொழிலில் ஈடுபட்ட பிரம்மா மாயையால் மயங்கி சிருஷ்டி செய்யும் உபாயத்தை அறியாதவனாய் சிவபெருமானை வணங்கி இவ்வாறு கூறினான்.

नमस्ते देवदेवेश नमस्ते करुणाकर ।
अस्मदादिजगत्सर्वनिर्माणनविधिक्षम ॥ १८॥
उपायं वद मे शम्भो जगत्स्रष्टः! जगत्पते ।
सर्वज्ञः सर्वशक्तिस्त्वं सर्वकर्ता सनातनः ॥ १९॥

தேவதேவரும், கருணைக்கடலும், உலகங்களைப் படைப்பவரும், உலகநாயகரும், எல்லா வல்லமையும் பொருந்தியவரும், அனைத்தையும் அறிந்தவருமான சம்புவிற்கு எனது வணக்கங்கள். உலகங்களைப் படைப்பதற்கான உபாயத்தை எனக்கு அருள வேண்டுகிறேன்.

தேவர்க டலைவ முக்கட் செல்வயான் முதலா யுள்ள
யாவையு மாக்க வல்ல வாறைவ முற் றுணர்ந்த மேலோ
யோவரு மயலான் மாழ்கி யுணர்ந்திலேன் றமிய னேற்கு
முவ்வுல கினையு மாக்கு முபாயந் மொழிதி யென்றான்.

தேவர்கள் தலைவனே! எனக்கு சிருஷ்டி உபாயத்தை அருளிச் செய்வாயாக என வேண்டினான்.

इति सम्प्रार्थितः शम्भुर्ब्रह्मणा विश्वनायकः ।
उपायमवदत् तस्मै लोकसृष्टिप्रवर्तनम् ॥२०॥

இவ்வாறு பிரம்மாவினால் பிரார்த்திக்கப்பட்ட சிவபெருமான் மீண்டும் அவருக்கு உலகப் படைப்பிற்கான உபாயங்களை அருளினார்.

उपायमीश्वरेणोक्तं लब्ध्वाऽपि चतुराननः ।
न समर्थोऽभवत् कर्तुं नानारूपमिदं जगत् ॥ २१॥
पुनस्तं प्रार्थयामास ब्रह्मा विह्वलमानसः ।

ஈசுவரன் அருளிய உபாயத்தைப் பெற்றும் நான்முகக் கடவுள் பல்வகைப்பட்ட இவ்வுலகத்தைப் படைக்க இயலாமலிருந்தார். எனவே மீண்டும் சிவபிரானை வணங்கிப் பிரார்த்தித்தார்.

நா௵ முகனதனைக கூற நனையவாழு கொ௵றைவேணாக
கூ௵முக மதியணாநத கொழுயபவ ளககு௵ ற௵னா௵
றா௵முக மலரநது ரைததா௵ சகயபுர வகையு ரைததுந
தே௵முக மலர௵ மேலோ௵ றெரநதில௵ றியாஙகிச
சொலவா௵.

சிவபெருமானும் அவ்வாறே பிரம்மனுக்கு சிருஷ்டியின் உபாயத்தைக் கூறினுர்; இருந்தும் பிரம்மன் அதை அறியாதவனுய் மீண்டும் கூறினுன்:

देवदेव महादेव जगत्प्रथमकारण ॥ २२॥
नमस्ते सच्चिदानन्द स्वेच्छाविग्रहराजित।
भव शर्व महेशान सर्वकारणकारण॥ २३॥
भवदुक्तो ह्युपायो मे न किञ्चिज्ज्ञायतेऽधुना।
सृष्टिं विधेहि भगवन् प्रथमं परमेश्वर ।
ज्ञातोपायस्ततः कुर्यां जगत्सृष्टिमुमापते ॥ २४॥

தேவதேவனே! மஹாதேவனே! உலகங்களுக்கெல்லாம் முதற்காரணனே! ஸச்சிதானந்த வடிவரே! உமாபதியே! நீங்கள் உரைத்த உபாயங்கள் எதுவும் எனக்கு விளங்கவில்லே. நீங்களே முதலில் உலகசிருஷ்டியைத் தொடங்குங்கள்; அதிலிருந்து உபாயத்தைக் கற்று நான் அதைத் தொடர்வேன் என்ருர்.

உலககா ரணபப டைபப ஞுபாயந யருள னாலே
பலமுறை யுரைதது நெஞுசிற பட்டதிள றமல நமுள
மலரதலை யுலக மாககிள மறறது கணடு தேறி
யாலகுற வடிய னேளப னயறறுவ லெளறு சொளனாள.

தேவரீர் பலமுறை கூறியும் என்ருல் அறிய இயலவில்லே;
தாங்களே உலகங்களேப் படைத்துக் காட்டிருல் யானும்
அதைக் கற்று சிருஷ்டித் தொழிலேச் செய்வேன் என்ருன்.

इत्येवं प्रार्थितः शम्भुर्ब्रह्मणा विश्वयोनिना ।
ससर्जात्मसमप्रख्यान् सर्वगान् सर्वशक्तिकान् ॥ २५॥
प्रबोधपरमानन्दपरिवाहितमानसान् ।
प्रमथान् विश्वनिर्माणप्रलयापादनक्षमान् ॥ २६॥

இவ்வாறு பிரம்மருல் பிரார்த்திக்கப்பட்ட சிவபெருமான்
தன்னேயொத்த ஆற்றல் கொண்டவர்களும் அனேத்து வல்லமை
உடையவர்களும், எங்கும் வியாபித்திருப்பவர்களும் உயர்ந்த
ஞானமும் ஆனந்தமும் உடையவர்களும் உலகங்களேப்
படைத்து பின்னர் அழிக்கும் வல்லமை கொண்டவர்களுமான
பூதகணங்களே முதலில் தோற்றுவித்தார்.

ஈசுவரசிருஷடி

வாதியாது புகளறு நிறப மிளனவாா சடையாற கீறறு
மதிபுனை கடவு டளபோல வளரொள வடிவ ராகி
முதிரறி வுடைய ராகி முழுதையு மளாதத ழிககு
மதிசய நிலைய டைநத கணஙகளை யளாததாள முளனா.

சிவபெருமானும், அவ்வாறே தன்னேப் போன்ற உருவமும்,
உலகங்களேப் படைத்து அழிக்கும் வல்லமை கொண்ட
சிவகணங்களே முதலில் படைத்தார்.

तेषु प्रमथवर्गेषु सृष्टेषु परमात्मना ।
रेणुको दारुकश्चेति द्वावभूतां शिवप्रियौ ॥ २७॥

सर्वविद्याविशेषज्ञौ सर्वकार्यविचक्षणौ ।
मायामलविनिर्मुक्तौ महिमातिशयोज्वलौ ॥ २८॥

சிவபிரானுல் தோற்றுவிக்கப்பட்ட அப்பூதகணங்ளுள் ரேணுகர் தாருகர் என்னும் இருவர் சிவபெருமானிடம் மிக்க அன்பு பூண்டவர்களாயும் எல்லா வித்தைகளிலும் தேர்ந்தவர்களாயும் எல்லாவற்றையும் செய்யும் ஆற்றல் உடையவர்களாயும் மாயை முதலான மலங்களற்றவர்களாயும் தங்களுடைய மஹிமையால் பிரகாசிப்பவர்களாயும்,

சாµµµµங கணாங்க டயமு ளாரேணுக தாரு கபபே
ரேµµள ரருவ ரெங்க ளசணுக கினய ரமானோ
ராµறலை யாவ ராணு மறைநதிடµ கµயµ மாயை
மாµறிடுய வலியµ வாசசை யாவையுய வலல ரயமா.

அக்கணங்களுள், இரேணுகர், தாருகர் என்னும் இருவர் சிவபெருமானிடம் மிக்க அன்பு பூண்டவர்கள்; அவர்களுடைய வலிமையை எவரும் அறிந்திலர்.

आत्मानन्दपरिस्फूर्तिरसास्वादनलम्पटौ ।
शिवतत्त्वपरिज्ञानतिरस्कृतभवामयौ ॥ २९॥
नानापथमहाशैवतन्त्रनिर्वाहतत्परौ ।
वेदान्तसारसर्वस्वविवेचनविचक्षणौ ॥ ३०॥
नित्यसिद्धौ निरातङ्कौ निरङ्कुशपराक्रमौ ।

தங்களது ஆத்மானந்தத்தையே ரஸிப்பவர்களாயும், சிவதத்துவத்தை உணர்ந்ததால் சம்சாரக் கடலில் வீழாதவர்களாயும், பல்வகைப்பட்ட சைவதந்திரங்களை அறிந்தவர்களாயும், வேதாந்தத்தின் சாரத்தை நன்கு ஆய்ந்தவர்களாயும் எல்லாவகைச் சித்திகளையும் பெற்றவர்களாயும், எதிரிகளற்ற பராக்கிரமம் வாய்ந்தவர்களாயும்

தௌாதரு முளததµ மாறாச சிவாநநத வமுத முணாடு
களாதரு நலததµ கலவாக கடலகரை கணாடோµ ஞான

வொளயனர வேத சார முணரநதவ ரகநதை யபலோர
வளவுற வடய மைநது மெளதென வெளற வர..

அவர்கள் தெளிந்த மனத்தையுடையவர்; சிவானந்த அமுதை எப்போதும் பருகுபவர்; கல்வியில் கரை கண்டு, வேதசாரத்தை உணர்ந்தவர். புலன்களை வென்றவர்.

तादृशौ तौ महाभागौ सम्वीक्ष्य परमेश्वरः ॥ ३१॥
समर्थौ सर्वकार्येषु विश्वासपरमाश्रितौ ।
अन्तःपुरद्वारपालौ निर्ममे नियतौ विभुः ॥ ३२॥

அனைத்தையும் ஆற்றும் திறன் கொண்டவர்களாயும் தனது நம்பிக்கைக்குப் பாத்திரர்களாயும் திகழும் அவ்விருவர்களையும் சிவபெருமான் தனது அந்தப்புரக் காவலர்களாய் நியமித்தார்.

गणेश्वरौ रेणुकदारुकावुभौ विश्वासभूतौ नवचन्द्रमौलेः ।
अन्तःपुरद्वारगतौ सदा तौ वितेनतुर्विश्वपतेस्तु सेवाम् ॥ ३३ ॥

அவ்வாறு சிவபெருமானின் அந்தப்புரக்காவலர்களாய் நியமிக்கப்பட்ட ரேணுகரும் தாருகரும் பெருமானின் நம்பிக்கைகுப் பாத்திரர்களாய் உலகநாயகனின் சேவையைச் செவ்வனே செய்து வந்தனர்.

அனையவர தயமை நோககி யாலயத துளள லஙகுய
புனைமண வாயல காபபு புரசடைக கடவு ணபக
வனதென வவரு மேறறவ வேவலிற சிறநதோ ராகித
தனவழி நுதலி மைககுரு சஙகரன பாலி ருநதார.

சிவபெருமான் அவர்களுக்கு தனது உறைவிடத்தின் வாயிற்காப்புப் பணியை வழங்கினர்; அவர்களும் அவ்வேலையைச் செவ்வனே செய்து கொண்டு சிவபெருமான்பால் இருந்து வந்தனர்.

॥ इति श्रीसिद्धान्तशिखामणौ रेणुकदारुकावतरणं नाम द्वितीयपरिच्छेदः ॥

॥ तृतीयः परिच्छेदः ॥

कदाचिदथ कैलासे कलधौतशिलामये ।
गन्धर्ववामनयनाक्रीडामौक्तिकदर्पणे ॥ १॥
मन्दारबकुलाशोकमाकन्दप्रायभूरुहे ।
मल्लीमरन्दनिष्यन्दपानपीनमधुव्रते ॥ २॥
कुङ्कुमस्तबकामोदकूलङ्कषहरिन्मुखे ।
कलकण्ठकुलालापकन्दलद्रागबन्धुरे ॥ ३॥
किन्नरीगीतमाधुर्यपरिवाहितगह्वरे ।
सानन्दवरयोगीन्द्रवृन्दालङ्कृतकन्दरे ॥ ४॥
हेमारविन्दकलिकासुगन्धिरसमानसे ।
शातकुम्भमयस्तम्भशतोत्तुङ्गविराजिते ॥ ५॥
माणिक्यदीपकलिकामरीचिद्योतितान्तरे ।
द्वारतोरणसंरूढशङ्खपद्मनिधिद्वये ॥ ६॥
मुक्तातारकितोदारवितानाम्बरमण्डिते ।
स्पर्शलक्षितवैडूर्यमयभित्तिपरम्परे ॥ ७॥
सञ्चरत्प्रमथश्रेणीपदवाचालनूपुरे ।
प्रवालवलभीशृङ्गशृङ्गारमणिमण्डपे ॥ ८॥
वन्दारुदेवमुकुटमन्दाररसवासितम् ।
रत्नसिंहासनं दिव्यमध्यस्तं परमेश्वरम् ॥ ९॥

ஒரு சமயம் கந்தருவ கன்னிகையரின் கேளிக்கை நிமித்தம் பற்பல முத்து மாலைகளால் அலங்கரிக்கப்பட்டதும் மந்தாரம், மகிழம், மாகந்தம், அசோகம், முதலிய மரங்களால் சூழப்பட்டதும், மல்லிகை முதலான மலர்களின் தேனை அருந்தும் வண்டுகள் நிறைந்ததும் குங்குமப்பூக்கொடிகளிலிருந்து வெளிப்படும் நறுமணம் நிறைந்ததும் கின்னர கன்னிகைகளின் இனிய கானங்களால் நிறைந்த பொந்துகளையுடையதும் ஆத்மானந்தத்தையே அனுபவிக்கும் யோகிகளால் சூழப்பட்ட சிகரங்களைக் கொண்டதும் தங்கத்தாமரைமலர்களால் அலங்கரிக்கப்பட்டதும்

பொன்னாலான நூற்றுக்கணக்கான தூண்கள் கொண்டதும் மாணிக்கதீபங்களின் ஒளியால் பிரகாசிப்பதும் சங்கநிதி பதுமநிதி எனுமிரண்டையும் நுழைவாயில் தோரணமாய்க் கொண்டதும் கணக்கற்ற முத்துவிதானங்களால் அலங்கரிக்கப்பட்டதும் வைடூரியமயமான சுவர்களைக் கொண்டதும் பூதகணங்கள் அங்குமிங்கும் செல்வதால் உண்டாகும் நூபுர ஓசையையுடையதும் பவளமயமான மண்டபங்களைக் கொண்டதுமான கைலாயமலையில் கணக்கற்ற தேவகணங்கள் தனது திருவடிகளை வணங்குவதால் அவர்களின் கிரீடமாணிக்கக் கற்களால் ஒளிவீசுவதுமான திருவடிகளையுடையவருமான பரமேசுவரன் பொன்மயமான பலகையின் மேல் இரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்தார்.

கயிலைச் சிறப்பு

வேத னிந்திரன் செங்கண்மால் புன்புகழ் மேவ்
யோதி மங்கள் றுவணனா யவர்தமை யுயர்த்த
வாதி யம்பிகை நாயகன் பெரும்புக ழுவனைக்
காதல் கொண்டுதாங் குழறது போன்றது கயிலை.

கயிலையில் பிரமன், இந்திரன், திருமால் முதலான தேவர்கள் சிவபெருமானைப் போற்றி துதி பாடிக்கொண்டிருந்தனர்.

தெள்ளு சோதியங் கயிலைமால் வரையினுற் சிறிது
வெள்ளி தான் கொடு திசைமுகக் கம்மியன் வரகா
லள்ளி வானருள் விழுங்குவா னமைத்ததொன் றன்றோ
வெள்ளு றாமதி யென்பதிவ் வுலகங்க ளெல்லாம்.

பிரமன் எனும் சிற்பி கயிலையிலிருந்து சிறிது வெள்ளியை எடுத்து உலக இருளை விழுங்குவதற்காகச் செய்யப்பட்டதோ என நினைக்கும்படி சந்திரன் விளங்குகிறது.

சபாமண்டபச் சிறப்பு

அன்ன மாகயி லாயமோ ரருமறை யாகச்
சொன்ன மாமொழி யாகுமோர் செய்யபொன்னா லியன்ற
தன்னை நேர்மணி மண்டபத் தரியணை தன்னில்
முன்ன மோர்பக லுமையொடு முதல்வனவ் விருந்தான்.

வேதமே ஓர் மலை போன்ற உருவெடுத்தது போல் தோன்றும்
அக்கயிலை மலையில் அழகான மணிமண்டபத்துள்
சிவபெருமான் உமையம்மையுடன் வீற்றிருந்தார்.

तमास्थानगतं देवं सर्वलोकमहेश्वरम् ।
त्र्य्यन्तकमलारण्यविहारकलहंसकम् ॥ १०॥

ஆஸ்தான மண்டபத்திலே அவ்வாறு வீற்றிருப்பவரும்,
வேதாந்தத்தின் உட்பொருள் எனும் தாமரைக்காட்டினுள் திரியும்
அன்னப்பறவையைப் போன்றவரும்,

उदारगुणमोंकारशुक्तिकापुटमौक्तिकम् ।
सर्वमङ्गलसौभाग्यसमुदायनिकेतनम् ॥ ११॥

உயர்ந்த குணங்களனைத்தும் நிறைந்தவரும் ஓங்காரமெனும்
முத்துச்சிப்பியினுள் விளங்கும் முத்தைப் போன்றவரும்,
அனைத்து மங்கலங்களும் நிறைந்தவரும்,

संसारविषमूर्च्छालुजीवसञ्जीवनौषधम् ।
नित्यप्रकाशनैर्मल्यकैवल्यसुरपादपम् ॥ १२॥

சம்சாரமென்னும் கொடிய விஷத்தால் மூர்ச்சையான
ஜீவன்களுக்கு சஞ்ஜீவனி எனும் அமுதம் போன்றவரும்,
நித்தியப்பிரகாசமான ஒளியினுல் விளங்கும் முக்தியெனும்
கற்பகமரம் போல்வரும்,

अनन्तपरमानन्दमकरन्दमधुव्रतम् ।
आत्मशक्तिलतापुष्यत्त्रिलोकीपुष्पकोरकम् ॥ १३॥

எல்லையற்ற பரமானந்தமெனும் தேனைப் பருகும் வண்டு போன்றவரும், தனது சக்தியெனும் கொடியில் தோன்றிய மூவுலகெனும் பூக்களைக் கொண்டவரும்,

ब्रह्माण्डकुण्डिकाषण्डपिण्डीकरणपण्डितम् ।
समस्तदेवताचक्रचक्रवर्तिपदे स्थितम् ॥ १४॥

இப்பிரம்மாண்டமெனும் கலயத்தில் அனைத்தையும் அடக்கும் வல்லமையுடையவரும், எல்லா தேவர்களுக்கும் மேலான உயர்ந்த நிலையிலிருப்பவரும்,

चन्द्रबिम्बायुतच्छायादायादद्युतिविग्रहम् ।
माणिक्यमुकुटज्योतिर्मञ्जरीपिञ्जराम्बरम् ॥ १५॥

எண்ணற்ற சந்திரர்களின் ஒளியையொத்த திருமேனி கொண்டவரும், தனது மாணிக்கமகுடத்தின் ஒளியால் நிறைந்த அனைத்து திக்குகளையுடையவரும்

चूडालं सोमकलया सुकुमारबिसाभया ।
कल्याणपुष्पकलिकाकर्णपूरमनोहरम् ॥ १६॥

மிருதுவான நூல்போன்ற சந்திரகலையைத் தலையில் தரித்தவரும், கல்யாணபுஷ்பத்தைத் தன் காதில் ஆபரணமாகச் சூடியவரும்

मुक्तावलयसम्बद्धमुण्डमालाविराजितम् ।
पर्याप्तचन्द्रसौन्दर्यपरिपन्थिमुखश्रियम् ॥ १७॥

முத்துமாலையையும் முண்டமாலையையும் அணிந்தவரும் சந்திரனைப் பழிக்கும் அழகான முகம் கொண்டவரும்

प्रातः संफुल्लकमलपरियायत्रिलोचनम् ।
मन्दस्मितमितालापमधुराधरपल्लवम् ॥ १८॥

காலையில் அலர்ந்த தாமரையையொத்த முக்கண்களையுடையவரும் புன்சிரிப்புடன் கூடிய அளவான பேச்சைக் கொண்டவரும்,

गण्डमण्डलपर्यन्तक्रीडन्मकरकुण्डलम् ।
कालिम्ना कालकूटस्य कण्ठनाले कलङ्कितम् ॥ १९॥

கன்னம் வரையில் நீண்டு ஒளிவீசும் மகரகுண்டலங்களை அணிந்தவரும் கழுத்தில் காலகூடமெனும் கொடிய விஷத்தால் கருமை நிறமுடையவரும்,

मणिकङ्कणकेयूरमरीचिकरपल्लवैः ।
चतुर्भिः संविराजन्तं बाहुमन्दारशाखिभिः ॥ २०॥

கங்கணம், கேயூரம் முதலான அணிகள் பூண்ட தனது நான்கு புஜங்களெனும் மந்தாரமரத்தின் தளிர் போன்றிலங்கும் விரல்களையுடையவரும்,

गौरीपयोधराश्लेषकृतार्थभुजमध्यमम् ।
सुवर्णब्रह्मसूत्राङ्कं सूक्ष्मकौशेयवाससम् ॥ २१॥

கௌரியின் திருமுலைகளைத் தழுவி ஆனந்தமடையும் புஜங்களைக் கொண்டவரும் தங்கமுப்புரிநூல் அணிந்தவரும், மெல்லிய பட்டாடை அணிந்தவரும்,

नाभिस्थानावलम्बिन्या नवमौक्तिकमालया ।
गङ्गयेव कृताश्लेषं मौलिभागावतीर्णया ॥ २२ ॥

தனது தலையில் வந்திறங்கியவளும் நாபிஸ்தானம் வரையில் திகழும் வெண்முத்துமாலை போன்று விளங்குபவளுமான கங்கையைத் தழுவியவரும்,

पदेन मणिमञ्जीरप्रभापल्लवितश्रिया ।
चन्द्रवत्स्फाटिकं पीठं समावृत्य स्थितं पुरः ॥ २३॥

ஸ்படிகமயமான பீடத்தின் மேல் மணிநூபுரங்களின் ஒளியால் மிளிரும் அழகிய திருவடித்தாமரைகளை வைத்தவரும்

वामपार्श्वनिवासिन्या मङ्गलप्रियवेषया ।
समस्तलोकनिर्माणसमवायस्वरूपया ॥ २४॥

தனது திருமேனியினிடப்பாகத்தில் விளங்குபவளும் மங்கலமே வடிவானவளும், அனைத்துலகங்களையும் சிருஷ்டிக்கும் சக்தியோடு கூடியவளும்,

इच्छाज्ञानक्रियारूपबहुशक्तिविलासया ।
विद्यातत्त्वप्रकाशिन्या विनाभावविहीनया ॥ २५॥

இச்சை, ஞானம், கிரியை முதலான கணக்கற்ற சக்திகளை உடையவளும் வித்தியாதத்துவத்தில் பிரகாசிப்பவளும் எப்போதும் சிவபிரானை விட்டு அகலாதவளும்,

संसारविषकान्तारदाहदावाग्निलेखया ।
धम्मिल्लमल्लिकामोदझङ्कुर्वद्भृङ्गमालया ॥ २६॥

சம்சாரமெனும் கொடிய விஷமரக் காட்டை அழிக்கும் பெருந்தீ போல் விளங்குவதும் [தான் சூடியிருக்கும்] மல்லிகை முதலான மலர்மாலைகளின் தேனைப் பருகும் வண்டுக் கூட்டங்களையே மாலைபோல் அணிந்திருப்பவளும்

सम्पूर्णचन्द्रसौभाग्यसंवादिमुखपद्मया ।
नासामौक्तिकलावण्यनाशीरस्मितशोभया ॥ २७॥

முழுநிலவின் அழகையொத்த திருமுகத்தையும், மூக்கில் அணிந்திருக்கும் முத்தினால் மேலும் அழகான மூக்கினையும் உடையவளும்

मणिताटङ्करङ्गान्तर्वलितापाङ्गलीलया ।
नेत्रद्वितयसौन्दर्यनिन्दितेन्दीवरत्विषा ॥ २८॥

மணிகள் நிறைந்த காதணிகளின் ஒளியினூடே மிளிரும் திருக்கண்ணோக்கையுடையவளும் தாமரையின் அழகைப் பழிக்கும் இருகண்களைக் கொண்டவளும்,

कुसुमायुधकोदण्डकुटिलभ्रूविलासया ।
बन्धूककुसुमच्छायाबन्धुभूताऽधरश्रिया ॥ २९॥

மன்மதனின் கரும்புவில்லைப் போன்ற புருவங்களையும், செம்பருத்திப் பூவையொத்த சிவந்த உதடுகளையும் உடையவளும்

कण्ठनालजितानङ्गकम्बुबिब्बोकसम्पदा ।
बाहुद्वितयसौभाग्यवञ्चितोत्पलमालया ॥ ३०॥

வெண்சங்கின் அழகைப் பழிக்கும் கழுத்தினையும் நீலோத்பலமலர்மாலையின் அழகைப் பழிக்கும் மெல்லிய அழகிய புஜங்களையும் கொண்டவளும்

स्थिरयौवनलावण्यशृङ्गारितशरीरया ।
अत्यन्तकठिनोत्तुङ्गपीवरस्तनभारया ॥ ३१॥

யௌவனத்தின் முழுஅழகையும் பிரதிபலிக்கும் திருமேனியும் உருண்டு திரண்ட கடினமான திருமுலைகளையும் கொண்டவளும்

मृणालवल्लरीतन्तुबन्धुभूतावलग्नया ।
शृङ्गारतटिनीतुङ्गपुलिनश्रोणिभारया ॥ ३२॥

தாமரைத் தண்டினுள் இருக்கும் மிக மெல்லிய இழைகளையொத்த கேசங்களையும் சிருங்காரரசத்தை அதிகரிக்கும் அழகிய இடுப்பையும் கொண்டவளும்

कुसुम्भकुसुमच्छायाकोमलाम्बरशोभया ।
शृङ्गारोद्यानसंरम्भरम्भास्तम्भोरुकाण्डया ॥ ३३॥

செம்பருத்தியின் நிறத்தையொத்த சிவந்த மெல்லிய ஆடையை அணிந்தவளும் சிருங்காரரசம் மிளிரும் அழகான வாழைத்தண்டையொத்த தொடைகளைக் கொண்டவளும்

चूतप्रवालसुषमासुकुमारपदाब्जया ।
स्थिरमङ्गलशृङ्गारभूषणालङ्कृताङ्गया ॥ ३४॥

மாந்தளிர் பவழம் முதலானவை போன்ற மிக மிருதுவான திருப்பாதங்களையுடையவளும் அழகை அதிகரிக்கும் பற்பல அணிகலன்களை அணிந்தவளும்

हारनूपुरकेयूरचमत्कृतशरीरया ।
चक्षुरानन्दलतया सौभाग्यकुलविद्यया ॥ ३५॥
उमया सममासीनं लोकजालकुटुम्बया ।

மணிமாலைகள் முதலான ஆபரணங்கங்களை அணிந்தவளும் காண்பதற்கு அழகான தோற்றம் கொண்டவளும் மங்களகரமான அனைத்து வித்தைகளையும் கொண்டவளும் உலகத்தையே தனது குடும்பமாகக் கருதுபவளுமான உமையம்மையுடன் வீற்றிருந்தார்.

अपूर्वरूपमभजन् परिवाराः समन्ततः ॥ ३६॥

அங்கிருந்த பரிவாரங்கள் புதுவிதமான தோற்றங்களைக் கொண்டிருந்தனர்.

पुण्डरीकाकृतिं स्वच्छं पूर्णचन्द्रसहोदरम् ।
दधौ तस्य महालक्ष्मीः सितमातपवारणम् ॥ ३७॥

முழுநிலவையொத்ததும் தாமரைமலர் போன்ற அமைப்புடையதும் ஒளிபொருந்தியதுமான வெண்கொற்றக் குடையை சிவபிரானுக்கு மஹாலக்ஷ்மி தாங்கினாள்.

तन्त्रीझङ्कारशालिन्या सङ्गीतामृतविद्यया ।
उपतस्थे महादेवमुपान्ते च सरस्वती ॥ ३८॥

சங்கீத அமுதைப் பொழியும் இனிமையான வீணையுடன் ஸரஸ்வதியானவள் மஹாதேவரருகில் இசைத்துக் கொண்டிருந்தாள்.

झणत्कङ्कणजातेन हस्तेनोपनिषद्वधूः ।
ओंकारतालवृन्तेन वीजयामास शङ्करम् ॥ ३९॥

உபநிஷத் எனும் அழகிய மங்கை கைத்தாளம் கொண்டு ஓங்காரநாதம் எழுப்பிக்கொண்டிருந்தாள்.

चलच्चामरिकाहस्ता झङ्कुर्वन्मणिकङ्कणाः ।
आसेवन्त तमीशानमभितो दिव्यकन्यकाः ॥ ४०॥

பற்பல தேவநங்கையர்கள் தங்களது மணிகங்கணங்கள் அணிந்த கைகளால் சாமரம் வீசிக்கொண்டிருந்தனர்.

चामराणां विलोलानां मध्ये तन्मुखमण्डलम् ।
रराज राजहंसानां भ्रमतामिव पङ्कजम् ॥ ४१॥

அங்கு வீசும் சாமரங்களுக்கிடையில் சிவபெருமானுடைய திருமுகம் ராஜஹம்ஸம் எனும் அன்னப்பறவைகள் மத்தியில் ஒளிவீசித் திகழும் தாமரை போல் பிரகாசித்தது.

मन्त्रेण तमसेवन्त वेदाः साङ्गविभूतयः ।
भक्त्या चूडामणिं कान्तं वहन्त इव मौलिभिः ॥ ४२॥

வேதங்கள் தங்களது ஆறு அங்கங்களுடன் திருமுடிகளில் சூடாமணியைத் தரித்தது போல் அங்கு சேவை செய்தன.

तदीयायुधधारिण्यस्तत्समानविभूषणाः ।
अङ्गभूताः स्त्रियः काश्चिदासेवन्त तमीश्वरम् ॥ ४३॥

சிவபெருமானது ஆயுதங்கள் அவ்வவ்வாயுதங்களையொத்த திருமேனிகளுடன் பெருமானை சேவித்துக் கொண்டிருந்தனர்.

आप्ताधिकारिणः केचिदनन्तप्रमुखा अपि ।
अष्टौ विद्येश्वरा देवमभजन्त समन्ततः ॥४४॥

அனந்தன் முதலான வித்தியேசுவரர்கள் தங்களது அதிகாரங்களைப் பெற்று சேவித்து வந்தனர்.

ततो नन्दी महाकालश्चण्डो भृङ्गिरिटिस्ततः ।
घण्टाकर्णः पुष्पदन्तः कपाली वीरभद्रकः ॥ ४५॥
एवमाद्या महाभागा महाबलपराक्रमाः ।
निरङ्कुशमहासत्त्वा भेजिरे तं महेश्वरम् ॥ ४६॥

நந்தி, மஹாகாலர், சண்டர், பிருங்கிரிடி, கண்டாகர்ணர், புஷ்பதந்தர், கபாலி, வீரபத்திரர் போன்ற சக்திவாய்ந்தவர்களும் மிக உயர்ந்தவர்களும் தடையற்ற ஆற்றல் கொண்டவர்களும் மஹேசுவரனை வணங்கி நின்றனர்.

अणिमादिकमैश्वर्यं येषां सिद्धेरपोहनम् ।
ब्रह्मादयः सुरा येषामाज्ञालङ्घनभीरवः ॥ ४७॥
मोक्षलक्ष्मीपरिष्वङ्गमुदिता येऽन्तरात्मना ।
येषामीषत्करं विश्वसर्गसंहारकल्पनम् ॥ ४८॥
ज्ञानशक्तिः परा येषां सर्ववस्तुप्रकाशिनी ।
आनन्दकणिका येषां हरिब्रह्मादिसम्पदः ॥ ४९॥
आकाङ्क्षन्ते पदं येषां योगिनो योगतत्पराः ।
काङ्क्षणीयफलो येषां सङ्कल्पः कल्पपादपः ॥ ५०॥
कर्मकालादिकार्पण्यचिन्ता येषां न विद्यते ।
येषां विक्रमसन्नाहा मृत्योरपि च मृत्यवः ॥ ५१॥
ते सारूप्यपदं प्राप्ताः प्रमथा भेजिरे शिवम् ॥

அணிமா முதலான சித்திகள் எவர்களுடைய சித்திகளுக்கு முன் நிலையற்றவையோ, பிரம்மா முதலான தேவர்கள் எவர்களுடைய ஆணையை மீற அஞ்சுகின்றனரோ, எவர்களுடைய ஆன்மாக்கள் மோக்ஷமெனும் எல்லையற்ற செல்வத்தால் தழுவப்பட்டுள்ளனவோ, எவர்களுக்கு

உலகங்களைப் படைத்தல் போன்ற செயல்கள் ஒரு மிகச் சிறிய செயலோ, அனைத்தையும் பிரகாசிக்கும் ஞானசக்தியானது எவர்களுக்கு வாய்க்கப்பட்டதோ, ஹரி, பிரம்மா போன்ற பெருந் தேவர்களின் செல்வங்கள் கூட எவர்களுக்கு மிகச் சிறிய ஆனந்தமோ, எவர்களுடைய நிலையை யோகிகள் அடைவதற்குத் தவம் புரிகின்றனரோ, எவர்களுடைய மனதில் தோன்றும் மிகச் சிறிய இச்சைகளையும் கற்பகமரம் பூர்த்திசெய்கின்றதோ, காலம், கருமம் போன்ற சம்சாரமலங்கள் எவர்களுக்கு இல்லையோ, எவர்களுடைய பராக்கிரமம் காலனாகிய யமனுக்கே யமனாக விளங்குகிறதோ அத்தகைய சிவபூதகணங்கள் சிவபெருமானை ஒத்த உருவங்களை அடைந்து சாரூப்பியமெனும் முத்தி நிலையை அடைந்து அங்கு விளங்குகின்றனர்.

ब्रह्मोपेन्द्रमहेन्द्राद्या विश्वतन्त्राधिकारिणम् ।
आयुधालङ्कृतप्रान्ताः परितस्तं सिषेविरे ॥ ५२॥

பிரம்மா, உபேந்திரன், மஹேந்திரன் போன்ற தேவர் தலைவர்கள் அங்கு ஆயுதங்களை ஏந்தி உலகங்களை இயக்கும் சர்வவல்லமை கொண்ட சிவபெருமானைச் சுற்றிலும் காவல் பூண்டு ஒழுகி நின்றனர்.

आदित्या वसवो रुद्रा यक्षगन्धर्वकिन्नराः ।
दानवा राक्षसा दैत्याःसिद्धा विद्याधरोरगाः ।
अभजन्त महादेवमपरिच्छिन्नसैनिकाः ॥५३॥

ஆதித்தியர்கள், வசுக்கள், யக்ஷர்கள் போன்றோர்களும் தங்களது கணக்கற்ற சைனியங்களுடன் அங்கு சேவை புரிந்து வந்தனர்.

மகாசபை கூடுதல

இநதி ரனைசுர ரா்யய னயககர்கந தருவர்
சநதி ரனைகதி ருரகர்சித தர்கள்வறுர றகுவர்
முநது பூங்கண நாயகர் முனிவரர் வசுககள்
வநது கணடன ருமையொடு பரமனை மகிழநது.

இந்திரன், கந்தருவர், சந்திரன், மற்றும் சிவகணத்தலைவர்கள், முனிவர்கள் முதலியோர் பரமேசுவரனைக் கண்டு வணங்கினர்.

वसिष्ठो वामदेवश्च पुलस्त्यागस्त्यशौनकाः ।
दधीचिर्गौतमश्चैव सानन्दशुकनारदाः ॥ ५४॥
उपमन्युभृगुव्यासपाराशरमरीचयः ।
इत्याद्या मुनयः सर्वे नीलकण्ठं सिषेविरे ॥ ५५॥

வஸிஷ்டர், வாமதேவர், புலஸ்தியர், அகஸ்தியர், சௌனகர், ததீசி, கௌதமர், ஸானந்தர், சுகர், நாரதர், உபமன்யு, பிருகு, வியாஸர், பராசரர், மரீசி முதலான முனிவர்கள் நீலகண்டரான சிவபெருமானை வணங்கி நின்றனர்.

पार्श्वस्थपरिवाराणां विमलाङ्गेषु बिम्बितः ।
सर्वान्तर्गतमात्मानं स रेजे दर्शयन्निव ॥ ५६॥

தன்னைச் சூழ்ந்துள்ள பரிவாரங்களின் எவ்வித மலமுமற்ற பரிசுத்தமான தேஹங்களில் சிவபெருமான் தனது திருமேனி பிரதிபலிப்பதால் அனைவரின் அந்தராத்மாவாகத் தான் திகழ்வதைக் கண்டு ரசித்து மேலும் பிரகாசித்தார்.

क्षणं स शम्भुर्देवानां कार्यभागं निरूपयन् ।
क्षणं गन्धर्वराजानां गानविद्यां विभावयन् ॥ ५७॥

சிவபெருமான் க்ஷணநேரம் தேவர்கள் செய்யவேண்டிய செயல்களைக் கண்காணித்தார்; க்ஷணநேரம் கந்தர்வராஜனுடைய கானத்தைக் கேட்டு மகிழ்ந்தார்.

ब्रह्मविष्ण्वादिभिर्देवैः क्षणमालापमाचरन् ।
क्षणं देवमृगाक्षीणां लालयन्नृत्यविभ्रमम् ॥ ५८॥

பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்களுடன் க்ஷணநேரம் உரையாடினர்; தேவகன்னிகைகளின் நடனத்தைக் க்ஷணநேரம் ரசித்தார்.

व्यासादीनां क्षणं कुर्वन् वेदोच्चारेषु गौरवम् ।
विदधानः क्षणं देव्या मुखे बिम्बाधरे दृशः ॥ ५९॥

வியாஸர் போன்ற முனிவர்களின் வேதோச்சாரத்தைக்
க்ஷணநேரம் கேட்டார்; தேவியின் திருமுகத்தில் விளங்கும்
செவ்விய உதடுகளைக் க்ஷணநேரம் நோக்கினார்.

हास्यनृत्यं क्षणं पश्यन् भृङ्गिणा परिकल्पितम् ।

பிருங்கி போன்றோர் நிகழ்த்தும் ஹாஸ்ய நடனத்தைக்
க்ஷணநேரம் கண்டு மகிழ்ந்தார்.

नन्दिना वेत्रहस्तेन सर्वतन्त्राधिकारिणा ॥ ६०॥
अमुञ्चता सदा पार्श्वमात्माभिप्रायवेदिना ।
चोदितान् वासयन् कांश्चिद्विसृजन् भ्रूविलासतः ।
सम्भावयंस्तथा चान्यानन्यानपि नियामयन् ॥ ६१॥

அனைத்துக் கண்காணிப்பிலும் தலைசிறந்தவரும் சிவபெருமானின்
பக்கலில் எப்போதும் இருப்பவரும் சிவபெருமானது
எண்ணத்தை நன்கு அறிந்தவருமாகிய நந்தியெம்பெருமான்
பிரம்புத்தடியைக் கையில் கொண்டு உள்ளே செல்ல
அனுமதிப்போரை அருகில் இருத்தியும் சிலரைத் தன்
புருவநெரிப்பால் வெளியேற்றியும் மற்றும் சிலரைக் கௌரவித்தும்
மற்றோரை அடக்கியும் பணி செய்து கொண்டிருந்தார்.

समस्तभुवनाधीशमौलिलालितशासनः ।
अकुण्ठशक्तिरव्याजलावण्यललिताकृतिः ॥ ६२॥
स्थिरयौवनसौरभ्यशृङ्गारितकलेवरः ।
आत्मशक्त्यमृतास्वादरसोल्लासितमानसः ॥ ६३॥
स्वाभाविकमहैश्वर्यविश्रामपरमावधिः ।
निष्कलङ्कमहासत्त्वनिर्मितानेकविग्रहः ॥ ६४॥

अखण्डारातिदोर्दण्डकण्डूखण्डनपण्डितः ।
चिन्तामणिः प्रपन्नानां श्रीकण्ठःपरमेश्वरः ॥ ६५॥

தனது ஆணையை நிறைவேற்றக் காத்து நிற்கும் எல்லா லோகபாலர்களாலும் வணங்கப்படுபவரும், தடையற்ற சக்தி படைத்தவரும் தெய்வீக அழகு மிளிர்பவரும் என்றும் அகலாத இளமையுடன் விளங்குபவரும் தனது எல்லையற்ற சக்தியின் அமிர்தரசத்தை எப்போதும் பருகுபவரும் தனக்கே உரிய அளவற்ற சக்தியிலேயே எப்போதும் திளைப்பவரும் களங்கமற்ற தன் சக்தியினால் தானே ஏற்றுக் கொண்ட பற்பல உருவத்தைக் கொண்டவரும் அனைத்து எதிரிகளையும் போரில் வெல்லும் எல்லையற்ற திறமை உடையவரும் தன்னைச் சரண் அடைந்தோர்க்கு வேண்டிய வரத்தை வாரி வழங்குபவருமாகச் சிவபெருமான் விளங்கினார்.

பாடுவர் சிலர்சிலர் பணிவர் முன்னர்நின்
றாடுவர் சிலர்சில ரார்ப்பர் மென்மலர்
சூடுவர் சிலர்சிலர் துதிப்பரன் பினால்
வாடுவர் சிலர்சிலர் மகிழ்ந்து வாழ்த்துவர்.

சிலர் அங்கு பாடினர், ஆடினர், துதித்துப் போற்றினர், மலர்கள் சூடி வாழ்த்தினர்.

இன்னண மிவர்பல வியற்றல் கண்டுமை
தன்னொடு மரியணை தன்னின் மேவிய
மின்னவிர் சடையினன் விளங்கு பேரவை
முன்னுற நிகழ்ந்ததோர் முறைமை கூறுவாம்.

இவ்வாறு விளங்கும் சிவபெருமானின் சபையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் கூறுவோம்.

सभान्तरगतं तत्र रेणुकं गणनायकम् ।
प्रसादं सुलभं दातुं ताम्बूलं स तमाह्वयत् ॥ ६६॥

அங்கு சபையில் நுழைந்தோர்க்குத் தாம்பூலப் பிரசாதம் அளிப்பதற்காகப் கணநாயகரான ரேணுகரைப் பெருமான் அழைத்தார்.

அ௭௦௦௱டாரக டமெகெலா மரரய த௭௦௱க௭வுட
கொ௭௦௦௱டாரு௭௦௦௱ மெ௭லிலை கொடுபப நுாறகட௭ல
க௭௦௦௱டிடு மிரேணுக கணேச னெ௭௦௱பவரற
ப௭௦௦௱டுறு முவகையாற பரன ழைததன௭௦௱.

தேவர்களுக்கே அரிதானதும் தான் சூடியதுமான மெல்லிய இலையைக் கொடுப்பதற்காக அறிவிற் சிறந்த இரேணுகனெனும் சிவகணத்தலைவனைப் பெருமான் உவகையுடன் அழைத்தார்.

शम्भोराह्वानसन्तोषसम्भ्रमेणैव दारुकम् ।
उल्लङ्घ्य पार्श्वमगमल्लोकनाथस्य रेणुकः ॥ ६७॥

சிவபெருமான் தன்னை அழைத்ததால் மிகக் களிப்படைந்த ரேணுகர் தமதருகில் வீற்றிருந்த தாருகரைச் சட்டை செய்யாமல் சென்றார்.

तमालोक्य विभुस्तत्र समुल्लङ्घितदारुकम् ।
माहात्म्यं निजभक्तानां द्योतयन्निदमब्रवीत् ॥ ६८॥

தாருகரைச் சட்டை செய்யாது சென்ற ரேணுகரைக் கண்ட சிவபெருமான் தனது பக்தர்களின் பெருமையை அவருக்கு உணர்த்த நினைத்து இவ்வாறு கூறினார்.

அழைததரு ருவகையா ல௭வவா ரேணுக௭௦௱
றழைததுயர க௭வாயற தாரு க௭௦௱றனைப
பாழைததன௭௦௱ கடநதுநய வானைபா ழைபபவே
மழைததிரு மிடறறினோ௭௦௱ மருஙகு வநதன௭௦௱.

இரேணுகனும் மன மகிழ்ச்சியுடன் அங்கிருந்த தாருகன் எனும் கல்வியில் சிறந்த சிவபக்தனை மதியாமல் கடந்து வந்தான்.

மிடைந்திடு தனதுபே ரவையின் மெய்யுணர்
வடைந்திடு தாருக நாமத் தன்பனைக்
கடந்துழு மிரேணுக கணேசற் பார்த்திது
மடங்கலந் தவசுறை வள்ளல் கூறுவான்.

அவ்வாறு வந்த இரேணுகனைப் பார்த்து சிவபெருமான் கூறினன்:

रे रे रेणुक दुर्बुद्धे कथमेष त्वयाऽधुना ।
उल्लङ्घितः सभामध्ये मम भक्तो हि दारुकः ॥ ६९॥

ஓ ரேணுகனே! துர்மதிகொண்டவனே! இச்சபையில் எனது பக்தனுன தாருகன் உன்னுல் அவமதிக்காப்பட்டான்.

மதியுறு மிரேணுக மன்னு பேரவை
யதிலெம தடிமையா யிலங்கு தாருகற்
கதிதரு காலினாற் கடக்கப் பட்டதென்
வதிதவ றினையெனா வளயபன் மேயினான்.

இரேணுகனே! எமது சபையில் எமது அடிமையான தாருகனை மதியாமல் நீ கடந்து வந்ததன் காரணம் என்ன என வினவினர்.

लङ्घनं मम भक्तानां परमानर्थकारणम् ।
आयुः श्रियं कुलं कीर्त्तिं निहन्ति हि शरीरिणाम् ॥ ७०॥

எனது பக்தர்களை இகழ்வதும் அவமதிப்பதும் எல்லாக் கேடுகளுக்கும் காரணம்; ஆயுள், செல்வம், நற்பிறப்பு, பெருமை முதலியவற்றை அது அழித்துவிடும்.

சிவபகதரகள மஹிமை

கருதுநய பததரைக கடததல கேடடிறுக
கொருதன மூலமா யுடயப னாயுரு
மரதுறு செலவமுங குலமு மணறு தாய
பெரதுறு கீரததியுய பெயரதத ழிககுமால.

எனது பக்தரை மதியாது கடந்து வருதல் ஆயுள், செல்வம் முதலியவற்றை அழித்துவிடும்.

मम भक्तमवज्ञाय मार्कण्डेयं पुरा यमः ।
मत्पादताडनादासीत् स्मरणीयकलेवरः ॥ ७१॥

எனது பக்தனை மார்க்கண்டேயனை முன்னொருகால் யமன் அவமதித்ததால் என் பாதங்களால் அடியுண்டு தனது உடலை இழந்தான்.

கழிநதுள மயலிணமாரக கணட னாகுமென
றொழுயபுடை யவனைமுன றொடரநதி கழுநதென
தெழுஙகழ லுதையனா லிணறு முளருறு
தழுயபுறு முடலினன றணட னாயனான.

இயமன் எனது பக்தனை மார்க்கண்டனைத் துன்புறுத்தியதால் எனது காலால் உதைபட்டான்.

भृगोश्च शङ्ककर्णस्य मम भक्तिमतोस्तयोः ।
कृत्वानिष्टमभूद् विष्णुर्विकेशा दशयोनिभाक् ॥ ७२॥

எமது இருபக்தர்களான பிருகுவிற்கும் சங்குகர்ணனுக்கும் தீங்கிழைத்த விஷ்ணு தனது கேசங்களை இழந்து பத்துமுறை பிறவியெடுத்தார்.

தறிபவ மரமுடைச சஙகு கணணனறு
மறிவுணர பருகுவு மாமென றொணடராற
பறிபடு தலையனாயப பவஙகள பததிறு
மறிபடு மாலென மதிததி டாயகொலோ.

மேலும் சங்குகர்ணன், பிருகு முதலான எனது பக்தர்களை அவமதித்ததால் திருமால் பத்து முறை இவ்வுலகில் பிறவி எடுத்தார்.

मद्भक्तेन दधीचेन कृत्वा युद्धं जनार्दनः ।
भग्नचक्रायुधः पूर्वं पराभवमुपागमत् ॥ ७३॥

எம் பக்தனான ததீசியுடன் போரிட்டதில் தன் சக்கராயுதம் துண்டிக்கப்பட்டு விஷ்ணு மிகவும் இகழ்ச்சியடைந்தார்.

कृताश्वमेधो दक्षोऽपि मद्भक्तांश्च गणेश्वरान् ।
अवमत्य सभामध्ये मेषवक्त्रोऽभवत् पुरा ॥ ७४॥

அசுவமேதம் போன்ற பெரிய யாகங்களைச் செய்த தக்ஷன் கணேசுவரர்களாகிய எமது பக்தர்களைச் சபையில் அவமதித்ததால் ஆட்டின் முகத்தைப் பெற்றான்.

திருமறு மாரபண முண செயய வெணறொழுய
புரமுறு ததசியா லொடிநத நேமியாண
பொருமற மிழநதனண புகழுகக ணேசரால
வருமறி முகமொடு தககண மாழுகினாண.

ததீசி என்னும் எனது பக்தனாகிய முனிவரால் திருமால் தனது சக்கராயுதம் உடைந்தவனாய்ப் போரில் வலிமை இழந்தான்; எனது கணேசனால் தக்கனுக்கு ஆட்டுத் தலை பொருத்தப்பட்டது.

श्वेतस्य मम भक्तस्य दुरतिक्रमतेजसः ।
औदासीन्येन कालोऽपि मया दग्धः पुराऽभवत् ॥ ७५॥

எவராலும் வெல்லமுடியாத திறமை கொண்ட சுவேதன் எனும் எம் பக்தனை உதாசீனப்படுத்தியதால் காலனாகிய யமன் என்னால் எரிக்கப்பட்டான்.

एवमन्येऽपि बहवो मद्भक्तानामतिक्रमात् ।
परिभूता हताश्चासन् भक्ता मे दुरतिक्रमाः ॥ ७६॥

இவ்வாறு எம் பக்தர்களை அவமதித்ததால் திறமை மிக்க பலர் என்னால் அவமதிக்கப்பட்டும் தண்டிக்கப்பட்டும் உள்ளனர்.

தகுரூசெய ஹுடையநரூ சுவேதன றனனைமுன
னாகமுநதனன மறலியெய மாலெ ராநதனன
புகனறிடி னானணுநய பொருவா றொனடரா
ஹுகுநதிற ஹுடையவ ருளர நேகரே.

என் பக்தர்களுள் சிறந்த சுவேதன் என்பானை இயமன் இகழ்ந்ததால் அவன் எம்மால் எரிக்கப்பட்டான். இவ்வாறு இன்னும் பல பக்தர்கள் பலர் உளர்.

अविचारेण मद्भक्तो लङ्घितो दारुकस्त्वया ।
एष त्वं रेणुकानेन जन्मवान् भव भूतले ॥ ७७॥

ரேணுகனே! சிறிதும் யோசிக்காமல் எமது பக்தனுன தாருகன் உன்னால் அவமதிக்கப்பட்டதால் நீ பூவுலகில் பிறவி எடுக்கக்கடவாயாக.

இரேணுகர அவதராககுய காரணய

சாதமி றாருகன றனைகக டநதனை
யாதலி னாரேணுக வரவு தாஙகுறு
மேதினா தனாலொரு பாறபபு மேவென
வோதின னடியவரக குதவா செயபவன.

எனது பக்தனுன தாருகனை நீ கடந்ததால் பூவுலகில் நீ ஒரு பிறவி எடுக்கக் கடவாய் என சிவபெருமான் திருவாய் மலர்ந்தார்.

इत्युक्तः परमेशेन भक्तमाहात्म्यशंसिना ।
प्रार्थयामास देवेशं प्रणिपत्य स रेणुकः ॥ ७८॥

பக்தர்களின் பெருமையை எடுத்துரைக்கும் பரமேசுவரனுல் இவ்விதம் சபிக்கப்பட்ட ரேணுகன் தேவேசுவரரை வணங்கி பிரார்த்தனை செய்தார்.

मानुषीं योनिमासाद्य महादुःखविवर्धिनीम् ।
जात्यायुर्भोगवैषम्यहेतुकर्मोपपादिनीम् ॥ ७९॥
समस्तदेवकैंकर्यकार्पण्यप्रसवस्थलीम् ।
महातापत्रयोपेतां वर्णाश्रमनियन्त्रिताम् ॥
विहाय त्वत्पदाम्भोजसेवां किं वा वसाम्यहम् ॥ ८०॥
यथा मे मानुषो भावो न भवेत् क्षितिमण्डले ।
तथा प्रसादं देवेश विधेहि करुणानिधे ॥ ८१॥

கருணைக்கடலே! பெரும் துயரத்தை விளைவிப்பதும், ஜாதி, ஆயுள், சுகதுக்கம் ஆகியவற்றுக்குக் காரணமான கருமவினையைத் தோற்றுவிப்பதும், தேவர்களுக்கெல்லாம் பணிசெய்யும் வாய்ப்பினை அழிப்பதும், மூவிதத் துன்பங்களுக்கும் பிறப்பிடமானதும், வருணசிரமம் போன்ற கட்டுப்பாடுகள் நிறைந்ததுமான மனிதப்பிறவியை அடைந்து, தங்களது திருவடிக்கு திருப்பணி புரியும் வாய்ப்பையும் இழந்து நான் என் செய்வேன்? ஓ தேவதேவனே! பூவுலகில் நான் மானிடன் என்னும் உணர்வே எனக்கு இல்லாதவாறு அருள்புரிய வேண்டுகிறேன என்றார்.

அறததன முதலவந யழைகக மோகைதாள
பெறபபெறு மடியனேள பேதைத தளமையாற
சிறபபுறு தாருகற கடநத தமையைப
பொறுததரு ளெனவடி பணநது போறறினாள.

அருநதுயர வடிவமா யகளற மணணடை
வருநதுறு பறவயை மளன நிளனையாள

பார்ந்தன னலமருய பெற்றி யென்கொலோ
திருந்தடி யவர்பாடர் தர்க்கு மெந்தையே.

மானடப் பாறவாயை மயக்கு மண்ணாடை
யானெடுத்த திடாவகை யருள்செ யென்றனுந்
தேனெடுத்த திதழவாழு செய்ய கொண்ணறையோன்
றானுளத் தருளனார் சார்றன் மேயனான்.

அடியேன் பேதைத் தன்மையால் செய்த தவறைப் பொறுத்தருள வேண்டும்; உம்மைப் பிரிந்து பூவுலகில் எவ்வாறு அத்துன்பத்தைத் தாங்குவேன். எனக்கு அருள் செய்ய வேண்டுமென இரேணுகன் விண்ணப்பிக்கவும், சிவபெருமான் கூறினர்:

इति सम्प्रार्थितो देवो रेणुकेन महेश्वरः ।
मा भैषीर्मम भक्तानां कुतो भीतिरिहेष्यति ॥ ८२॥

ரேணுகனல் இவ்வாறு பிரார்த்திக்கப்பட்ட மஹேசுவரன், ரேணுகனே! எனது பக்தர்களுக்கு எவ்வாறு பயமேற்படும்? நீ சிறிதும் அஞ்சாதே.

श्रीशैलस्योत्तरे भागे त्रिलिङ्गविषये शुभे ।
कोल्लिपाक्यभिधानोऽस्ति कोऽपि ग्रामो महत्तरः ॥ ८३॥
सोमेश्वरभिधानस्य तत्र वासवतो मम ।
अस्पृशन् मानुषं भावं लिङ्गात् प्रादुर्भविष्यसि ॥ ८४॥

ஸ்ரீசைலத்தின் வடபாகத்தில் தெலுங்கு நாட்டில் கொல்லிபாகமெனும் சிறந்த கிராமம் உள்ளது. நான் அங்கு ஸோமேசுவரன் எனும் திருப்பெயருடன் கோயில் கொண்டுள்ளேன். நீ அங்கு மானிடன் எனும் உணர்வில்லாமல் அந்த லிங்கத்தினின்றும் வெளிப்படுவாய்.

मदीयलिङ्गसम्भूतं मद्भक्तपरिपालकम् ।
विस्मिता मानुषाः सर्वे त्वां भजन्तु मदाज्ञया ॥ ८५॥

எனது லிங்கத்திலிருந்து தோன்றியவனும் என் பக்தர்களைக் காப்பவனுமான உன்னை மக்கள் கண்டு மிகவும் வியப்படைந்து எனது ஆணையினால் உன்னை வந்தடைவார்கள்.

मदद्वैतपरं शास्त्रं वेदवेदान्तसम्मतम् ।
स्थापयिष्यसि भूलोके सर्वेषां हितकारकम् ॥ ८६॥

வேத வேதாந்தங்களில் கூறப்படுவதும் அனைவர்க்கும் நன்மையே பயப்பதுமான சிவாத்துவிதசாத்திரத்தை நீ பூவுலகில் நிலநிறுத்துவாய்.

मम प्रतापमतुलं मद्भक्तानां विशेषतः ।
प्रकाशय महीभागे वेदमार्गानुसारतः ॥ ८७॥

வேதநெறி வழுவாமல் என்னுடைய மஹிமையையும் குறிப்பாக என் பக்தர்களின் பெருமையையும் நீ பூவுலகில் பறைசாற்றி நிலைநிறுத்துவாயாக.

इत्युक्त्वा परमेश्वरः स भगवान् भद्रासनादुत्थितो
ब्रह्मोपेन्द्रमुखान् विसृज्य विबुधान् भ्रूसंज्ञया केवलम् ।
पार्वत्या सहितो गणैरभिमतैः प्राप स्वमन्तः पुरं
क्षोणीभागमवातरत् पशुपतेराज्ञावशाद् रेणुकः ॥ ८८॥

இவ்வாறு கூறிய பரமேசுவரன் தனது பத்திராஸனத்திலிருந்து எழுந்து பிரம்மா போன்ற தேவர்களைத் தன் புருவநெரிப்புக் குறிப்பால் விடையளித்து பார்வதிதேவியார் மற்றும் சில நெருக்கமான கணங்களுடன் கூடியவராய் தனது அந்தப்புரத்திற்கு எழுந்தருளினார்.
பசுபதியின் ஆணையினால் ரேணுகரும் பூவுலகம் வந்திறங்கினார்.

எ௦ானாக ாரேணுக வா௦ாரு ம௦ாணாடைத
து௦ாணுரு பாறவாயாற ருயர மெயதலை

யென்னடி யவர்தமக் கெவ்வி டத்தினு
மின்னல்வந் தடைகுவ தில்லை யல்லலையே.

கண்டவர் தமக்கெலாங் கயிலை காட்டுறும்
வண்டவர் பருப்பத மலையைத் தென்றிசை
கொண்டுள தெனுங்கினற் கொல்லி பாகமென்
றொண்டல மொன்றுள துரைப்பி னாயிடை.

என்னுரு வாயசோ மேச னென்னவோர்
தன்னிகர் பரசிவ லிங்கந் தங்குமா
லன்னதின் மானிடப் பிறவி யன்றியே
மன்னுதி யுலகெலாம் வியக்கும் வண்ணமே.

மறையொடு மறைமுடி மதம தாகுமென்
னறையுமத் துவிதநூ னலத்தி லியாவரு
மறிவுற மொழிதியென் னடியர் மேன்மையுங்
குறைவிலென் மேன்மையுங் கொடுத்தி யெங்கணும்.

எனக்கு நிகரான இரேணுகனே! மண்ணுலகில் பிறப்பதால் உனக்கு எவ்விதத் துன்பமும் நிகழாது. காண்போர்க்கெல்லாம் கயிலையை நினைவுறுத்தும் திருப்பருப்பதமலையின் தென்திசையில் கொல்லிபாகமென்பதொரு தலத்தில் சோமேசனென்னும் இலிங்கத்தில் நீ தோன்றுவாயாக. வேதத்துடன் அத்துவிதக் கொள்கையைக் கொண்ட வேதாந்தத்தையும், எனது மஹிமை, எனது அடியார் பெருமை ஆகியவற்றையும் நீ பரவச் செய்வாயாக என்றார்.

॥इति श्रीसिद्धान्तशिखामणौ रेणुकस्य भूर्लोकावगतिर्नाम
तृतीयः परिच्छेदः ॥ ३॥

॥ चतुर्थः परिच्छेदः ॥

अथ त्रिलिङ्गविषये कोल्लिपाक्यभिधे पुरे ।
सोमेश्वरमहालिङ्गात् प्रादुरासीत् स रेणुकः ॥ १॥
प्रादुर्भूतं तमालोक्य शिवलिङ्गात् त्रिलिङ्गजाः ।
विस्मताः प्राणिनः सर्वे बभूवुरतितेजसम् ॥ २॥

அங்கு தெலுங்கு நாட்டில் கொல்லிபாகமென்னும் ஊரில் ஸோமேசுவரலிங்கத்திலிருந்து ரேணுகன் வெளித்தோன்றினர். ஒளிவீசும் திருமேனியுடன் திகழும் ரேணுகனைக்கண்ட அனைவரும் மிக்க வியப்பில் ஆழ்ந்தனர்.

இரேணுகர் உலகில் வருதல்

அங்கண னிவ்வகை யருள மெல்லடிப்
பங்கய முடிமிசை படவி றைஞ்சியே
யெங்கண நாயகன் விடைகொண் டெய்தினான்
பொங்கொலி யுததிசூழ் புவியை நோக்கியே.

சிவபெருமான் இவ்வாறு அருளவும், இரேணுகனும் பூவுலகை நோக்கி வந்தான்.

இரேணுகர் அவதரித்த படலம்

எய்திய விரேணுக னிறைவன் கூறிய
மெய்திக ழிலிங்கமெய் மேவித் தோன்றினான்
கொய்துணர் மலிபொழிற் கொல்லி பாகய்வாழ்
செய்தவ முடையர்தாஞ் சென்று கண்டனர்.

புவியையடைந்த இரேணுகன் சிவபெருமான் கூறிய அந்த இலிங்கத்தினின்று தோன்றினன். அதை அங்கிருந்த மக்கள் கண்டு மகிழ்ந்தனர்.

भस्मोद्धूलितसर्वाङ्गं साररुद्राक्षभूषणम् ।
जटामुकुटसंयुक्तं त्रिपुण्ड्राङ्कितमस्तकम् ॥ ३॥
कटीतटीपटीभूतकन्थापटलबन्धुरम् ।
दधानं योगदण्डं च भस्माधारं कमण्डलुम् ॥ ४॥
शिवाद्वैतपरिज्ञानपरमानन्दमोदितम् ।
निर्धूतसर्वसंसारवासनादोषपञ्जरम् ॥ ५॥
शिवागमसुधासिन्धुसमुन्मेषसुधाकरम् ।
चित्तारविन्दसङ्गूढशिवपादाम्बुजद्वयम् ॥ ६॥
यमादियोगतन्त्रज्ञं स्वतन्त्रं सर्वकर्मसु ।
समस्तसिद्धसन्तानसमुदायशिखामणिम् ॥ ७॥
वीरसिद्धान्तनिर्वाहकृतपट्टनिबन्धनम् ।
आलोकमात्रनिर्भिन्नसमस्तप्राणिपातकम् ॥ ८॥
तमपृच्छन् जनाः सर्वे नमन्तः को भवानिति ।

